**<u>பவானி நகராட்சி (ஈரோடு மாவட்டம்) 20.10.2022-ம் தேதி வியாழக்கிழமை நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்</u>**

**பொருள் எண்: 1**

பவானி நகராட்சி நகர்மன்ற கூட்டரங்கில் மைக்செட், ஸ்பீக்கர் ஆகியவைகள் இல்லாததால் ஒவ்வொரு மாத நகர் மன்ற கூட்டத்திற்கும் வாடகைக்கு எடுத்து உபயோகபடுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே நகர் மன்ற கூட்டரங்கிற்கு மைக்செட், ஸ்பீக்கர் ஆகியவைகள் புதியதாக வாங்கி பொருத்த உத்தேச செலவினம் ரூ.3.00/- இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**<u>மன்றத்தீர்மான எண் : 124</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 1376/2022/இ1)

**பொருள் எண்: 2**

பவானி நகராட்சி அலுவலகத்தில் பழைய கட்டிடத்தில் உள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் அறையினை மராமத்து பணி செய்து நவீனபடுத்த அவசியமாக உள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.80/- இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 125</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.1375 /2022/இ1)

**பொருள் எண்: 3**

பவானி நகராட்சியின் மேற்க்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து மாலைமலர் நிறுவனத்தின் தொழில் மலர் புத்தகம் வெளியிட்டமைக்கு ரூ.10,000/-க்கான பட்டியல் தொகை வழங்கக் கோரி வரப்பட்டுள்ளது. மேற்கண்ட பட்டியல் தொகை MALAR PUBLICATIONS LIMITED ERODE நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 126</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 425/2022/இ1)

**பொருள் எண்: 4**

பவானி நகராட்சிக்குப்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரை விடுப்பட்ட பகுதிகளில் உள்ள முக்கிய சந்திப்புகளில் பொது மக்கள் நலன் கருதி வேகத்தடைகள் அமைக்க உத்தேச செலவினத் தொகை ரூ.4.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 127</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 1335/2022/இ1)

**பொருள் எண்: 5**

பவானி நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் குறித்த விளம்பரம் தினத்தந்தி தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டமைக்க ரூ.22,973/- க்கான பட்டியல் தொகை வழங்ககோரி வரப்பட்டுள்ளது. மேற்கண்ட பட்டியல் தொகை தினத்தந்தி நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 128</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 425/2022/இ1)

**பொருள் எண்: 6**

இந்நகராட்சி தூய்மை பணியில் Bin free city என்பதால் நகரில் எங்கும் குப்பைத் தொட்டி(Dumper Bin) வைத்து குப்பைகளை சேகரிப்பு பணி செய்யாமல் உள்ளதால் அதன் பயன்பாட்டில் இருந்து வந்த Dumper Placer லாரி எண்.TN36 AY0873யை பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தாமல் உள்ளது. தற்போது குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் அம்ரூட் 2.0 திட்டம் மூலம் மேற்கொள்ள உள்ளதால் பொதுமக்களுக்கு சீராக வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் பாதிப்படையும் நிலை ஏற்படும் என்பதால் டம்பர் பிளாசர் லாரியினை குடிநீர் டேங்க் பொருத்தி பொது மக்களுக்கு குடிநீர் விநியோக பயன்பாட்டிற்கு பயன்படுத்த ஏதுவாக டம்பர் பிளாசர் லாரியினை சரிசெய்யவும், குடிநீர் டேங்க் பொருத்தவும் RTO அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய வரி ஆகியவற்றை செய்ய ரூ.3.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 129</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 1170/2022/இ1)

**பொருள் எண்: 7**

பவானி நகராட்சி வார்டு எண் 8 அந்தியூர் ரோட்டில் அமைந்துள்ள அரசு துறைசார்ந்த ஆதிதிராவிடர் நலத்துறை (அரசு பள்ளி மாணவர் விடுதி) கதவு எண் 146,147 உள்ள கட்டிடங்களின் சொத்துவரி வரிவிதிப்புகளுக்கு, நிலுவைத்தொகை செலுத்தக் கோரி மேற்படி துறை அலுவலர்களுக்கு பலமுறை கடித அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தும், துறை அலுவலரை நேரில் சந்தித்தும் தொகை செலுத்தக் கோரியதற்கு அரசு மாணவர் விடுதிகட்டிடங்களுக்கு சொத்துவரி விலக்கு உள்ளது எனவும் மேலும் வரிகள் மதிப்பிடுதல் மற்றும் வசூலிப்பதும் விதிகள் அரசாணை நிலை எண் 225 ஊரகவளர்த்தித் துறை நாள் 13.12.2000 –ன் அடிப்படையில் அரசு மாணவர் விடுதிகளுக்கு சொத்துவரி விலக்களிக்கப்பட்டுள்ளது (Tamilnadu Government Gazette Madras PART IV –Section 2 and part V ) எனவே ஈரோடு மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் கீழ்கண்ட ஆதிதிராவிடர் நலத்துறை (அரசு பள்ளி மாணவர் விடுதி) சொத்துவரி நிலுவை கேட்பினை நிக்கம் செய்ய கோரிய கடித ந.க.எண்.22363/2022/தீ1 நாள்.13.09.2022 ல் தெரிவிக்கப்பட்டதன் படியும், இவ்வாறுள்ள நிலுவைக் கேட்பினை எந்த வகையிலும் விசூலிக்க இயலாத நிலை உள்ளதாலும் கீழ்கண்ட விபரப்படி உள்ள நிலுவை கேட்பினை 1995 -1996 முதல் 2021 -2022 வரை உள்ள கேட்புத்தொகையினை தள்ளுபடி செய்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | கதவு எண் | பெயர் | வருடம் முதல் / முடிய | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | 055/008/900140 055/4636 | 146 | E.E.PWD (GOVT.BOYS HOTEL) | 1995 -1996 I h/y to 2021-2022 II h/y | 1,88,688 |
| 2 | 055/008/900141 055/4637 | 147 | E.E.PWD (GOVT.BOYS HOTEL) | 1997 -1998 I h/y to 2021-2022 II h/y | 1,61,723 |
| | | | . | **Total Rs** | **3,50,411** |

**அலுவலககுறிப்பு**

கண்காணிப்பாளர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம்,ஈரோடு மற்றும் அரசாணை நிலை எண் 225 -னை பார்வையிட்டு ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் பவானியில் செயல்படும் அரசு பள்ளி மாணவர் விடுதி நிலுவைக் கேட்பினை தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத்தீர்மான எண் : 130</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.1217/2022/அ1)

**பொருள் எண்: 8**

வார்டு எண்.6,8,12,16,17 சொக்காரம்மன் நகர், சோமசுந்தரபுரம் மற்றும் அந்தியூர் ரோடு, தேவபுரம், மண்தொழிலாளர் 1 மற்றும் 2வது வீதி, திருநீலகண்டர வீதி ஆகிய பகுதிகளில் குழாய் பழுது மற்றும் நீட்டிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.78, நாள். 27.07.2022 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 30.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ். பாலசுப்ரமணியன், பவானி | 4.00 | 0.09 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | M/s Apex Associates, நசியனூார் ரோடு, ஈரோடு | | 1.25 % மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 0.09 % சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s திரு. எஸ். பாலசுப்ரமணியன், பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 131</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.948/2022/இ1-2)

**பொருள் எண்: 9**

பவானி நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை சமன் செய்தல், அனைத்து வார்டு பகுதிகளிலும் உள்ள பெரிய மண் சாக்கடை தூர்வார்தல் , முள்செடிகளை அப்புறப்படுத்துதல் மற்றும் ஆக்கரமிப்பு அகற்றுதல் **JCB** கொண்டு மேற்கொள்ளும் இதர பணிகளுக்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண். 14, நாள்: 28.04.2022-ல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் 28.09.2022-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம்** | **ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம்** |
|---|---|---|
| 1 | M/s. திரு.எம். முருகேசன், ஒப்பந்ததாரர், கவுந்தபாடி | ரூ.1275/- (ஒருமணி நேரத்திற்கு) |
| 2 | M/s. எஸ்.பாலசுப்ரமணியன், 43, பழனிபுரம் 3வது தெரு, பவானி. | ரூ.1200/- (ஒருமணி நேரத்திற்கு) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்திட்ட M/s. எஸ்.பாலசுப்ரமணியன், 43, பழனிபுரம் 3வது தெரு, பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 132</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.1628/2019/எச்1)

**பொருள் எண்: 10**

பவானி நகராட்சி - பொது சுகாதாரம் - இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்: 101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 50 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2019, நாள்: 29.11.2019-ன் படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 63 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

வெளிப்பணி ஒப்படைப்பு முறை 31.10.2022ஆம் தேதியுடன் ஒப்பந்தகாலம் முடிவடைகிறது. மேலும், ஒரு மாதத்திற்கு அதாவது 01.11.2022 முதல் 30.11.2022 வரை காலநீட்டிப்பு செய்வதற்கும், M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களுக்கு பணி ஆணை வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்ற அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 133</u>** அனுமதிக்கப்பட்டது ( ந.க.எண்:2255/2015/எச்1.)

**பொருள் எண்: 11**

வார்டு எண்.18,21,22,26,27 மண்தொழிலாளர் முதல் வீதி, பூக்கடை வீதி மற்றும் பாரத கேப் சந்து, மக்கான் வீதி, சீனிவாசபுரம் விரிவாக்கம், வெற்றிலை படிகட்டு ஆகிய பகுதிகளில் குழாய் நீட்டிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.78, நாள். 27.07.2022 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 30.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில்** | **ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு** |
|---|---|---|---|
| 1 | திரு. எஸ். பாலசுப்ரமணியன், பவானி | 4.00 | 0.09 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | M/s Apex Associates, நசியனூர் ரோடு, ஈரோடு | | 1.25 % மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 0.09 % சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s திரு. எஸ். பாலசுப்ரமணியன், பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 134</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.948/2022/இ1-2)

**பொருள் எண்: 12**

பவானி நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், மற்றும் ஒட்டுநர்களில் தகுதியான அனைவருக்கும் 2022-2023-ம் ஆண்டிற்கு அவரவர்களுக்கேற்ற அளவில் 55 ஜோடிகள் காலணிகளை அரசு நிறுவனமான Tamilnadu Khadi and Village Industries Board, Chennai அவர்களிடமிருந்து (Khadi Kraft) வாங்கிக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண் : 135** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண் : 280/2020/எச்1)

**பொருள் எண்: 13**

இந்நகராட்சி 15வது நிதிக்குழு மானியம் திட்டம் 2021-22 United grant-ல் கீழ்க்கண்ட இரண்டு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கடித ந.க.எண்.31117/2021/Amrut 2, நாள்.05.01.2022ன் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ.எண் | Name of work | Estimate Amt in Lakhs |
|---|---|---|
| 1 | Restoration of Bitumen road(Unicode 055012R146) at mahathma Gandhi road,(Length-281m, Breath – 6.80m), Weekly Market road(Unicode 055012R149) in Ward NO.12(Length – 220, Breath - 5.45m) | 32.00 |
| 2 | Providing cement Concrete road(Unicode 055010R129) at palanipuram Ist road (Last cross right side near Bhavani river) in ward no : 10 (length-80cm, Breath – 4.10m, Vent – 0.30m) | 5.45 |
| | TOTAL | 37.45 |

தற்போது இந்நகராட்சியில் குடிநீர் திட்ட அபிவிருத்திப் பணிகள் Amrut 2.0 திட்டத்தின் மூலம் மேற்கொள்ள இருப்பதால் புதியதாக சாலை அமைத்தால் பழுது ஏற்படும் என்பதினால் அப்பணிகளை இரத்து செய்து மாற்று பணியாக கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பவானி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள அம்மா உணவகத்திற்கு 15 cum capacity அமைத்தல் Bio-Methanation Gas-Plant | 20.00 |
| 2 | பவானி நகராட்சி பகுதிகளில் உள்ள சோடியம் ஆவி விளக்குகள், CFL விளக்குகள், HIgh Mast மற்றும் Mini mast தெரு மின்விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்தல் | 17.45 |
| | TOTAL | 37.45 |

மேற்கண்டவாறு தேர்வு செய்துள்ள பணிகளுக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றத்தீர்மான எண் : 136** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 1823/2022/இ1)

**பொருள் எண்: 14**

பவானி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளில் உள்ள காவேரி குடிநீர் மற்றும் பிற பயன்பாட்டிற்கு பயன்படும் ஆழ்துளை கிணற்று நீர் ஆகியவைகளின் நீருந்து குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் வெடிப்புகள் மற்றும் கசிவுகளை உடனுக்குடன் சரிபார்த்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய 2022-2023-ம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம்அனுமதிக்கலாம்

**மன்றத்தீர்மான எண் : 137** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.1347/2022 /இ1)

**பொருள் எண்: 15**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 27 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மினி பவர் பம்புகள் மற்றும் கழிப்பிடங்களில் தண்ணீர் வசதிக்காக பொருத்தப்பட்டுள்ள ஏர்கம்பரசர்கள் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து பொது மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே 2022-2023-ம் நிதியாண்டிற்கு பராமரிப்பு பணிசெய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றத்தீர்மான எண் : 138** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.1348/2022/இ1)

(ஒம்).E,சிந்தூரி.
தலைவர்,
பவானி நகராட்சி.

/உண்மைநகல்/

ஆணையாளர்
பவானி நகராட்சி.